DEPOSITION OF WITNESS
IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS,
(FAST TRACK COURT), KUMBAKONAM.

<table>
<tr><td colspan="3">Case No</td><td>:</td><td colspan="3">O.S : 87/2015</td></tr>
<tr><td colspan="3">Deposition of Witness</td><td>:</td><td colspan="3">பி.சா. 5</td></tr>
<tr><td>Name</td><td>:</td><td colspan="2">திரு.மணிகண்டன்</td><td rowspan="2">Occupation</td><td rowspan="2">:</td><td rowspan="2">உதவியாளர்,<br>சார்பதிவாளர்<br>அலுவலகம்,<br>கும்பகோணம்</td></tr>
<tr><td>Father's Name/ Husband</td><td>:</td><td colspan="2">கதிர்வேல்</td></tr>
<tr><td>Village</td><td>:</td><td colspan="2"></td><td rowspan="2">Age</td><td rowspan="2">:</td><td rowspan="2">35</td></tr>
<tr><td>Taluk</td><td>:</td><td colspan="2">கும்பகோணம்</td></tr>
</table>

Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act,1969 (Act 44 of 1969). 05-11-2025

**முதல் விசாரணை**

நான் கும்பகோணம் எண் 1 சார்பதிவாளர் அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் நான் இன்று நீதிமன்றத்திற்கு வந்திருக்கிறேன் . அழைப்பாணையில் எங்கள் அலுவலகத்தில் அளவந்திபுரம் கீழ தெருவில் வசித்து வந்த நடேச படையாச்சி குமாரர் நாகராஜன் என்பவர் எழுதி வைத்த அசல் உயிலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய கோரப்பட்டிருந்தது. எங்கள் அலுவலகத்தில் டெப்பாசிட் செய்யப்படும் உயில்கள் மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் சீல்டு கவரில் வைக்கப்படும். உயில் எழுதிய நபர் இறந்தபின்னர் , வாரிசுகள் உயிலை கோரினால் , மேற்படி உயில் மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் இருந்து தருவிக்கப்பட்டு, எங்கள் அலுவலகத்தில் பதிவேட்டில் பதிவு செய்து , வாரிசுதாரர்களுக்கு அதன் நகல் வழங்கப்படும். மீண்டும் அசல் உயில் சீல் வைக்கப்பட்டு மாவட்ட பதிவாளரிடமே பதிவு சட்டம் பிரிவு 45 இன் படி அனுப்பி வைக்கப்படும். அதனால், அழைப்பாணையில்கோரியுள்ள படி

எங்கள் அலுவலகத்தில் அசல் உயில் இல்லாததால் என்னால் கொண்டுவர முடியவில்லை.

**குறுக்கு விசாரணை**

உயில் பதிவு செய்த சார் பதிவாளர் பணியில் உள்ளார் . எங்கு பணிபுரிகிறார் என்று தெரியாது . உயில் டெப்பாசிட் செய்யப்பட்டது மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் தான் . உயிலின் அசல் ஆவணம் கேட்டு தான் சம்மன் செய்யப்பட்டது . அது மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் இருப்பதால் எங்கள் அலுவலகத்தால் தாக்கல் செய்ய முடியவில்லை. மாவட்ட பதிவாளருக்கு சம்மன் அனுப்பினால் தான் அசல் உயிலை பெறமுடியும். எங்களால் தர முடியாது.

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.